ஆண்டு பட்டிகை வழக்கு எண்.19/2025

# DEPOSITION OF WITNESS

(Chapter XXV of BNSS)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

CC.No. 19/2025 LW– 1 PW– 1

| | |
|---|---|
| Name | : சின்னதம்பி ( புகார்தாரர்) |
| Father's/Husband's Name | : மாசி பெரியண்ணன் |
| Village | : மங்களப்பட்டி |
| Taluk | : நத்தம் |
| District | : திண்டுக்கல் |
| Age | : 44/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 19th day of February 2026

( எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை)**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வந்து கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரி சரவணன் என்பவரை தெரியும். சுமார் 3 மாதங்களுக்கு முன்பாக ஒரு நாள் இரவு நேரம் நான் வீட்டில் இருந்தபோது எனக்கும், ஆஜர் எதிரிக்கும் இடையே வாய்த்தகராறு ஏற்பட்டது. அதில் நான் தடுமாறி கீழே விழுந்ததில் எனது வலது தோள்பட்டையில் காயம் ஏற்பட்டது. எதிரி தள்ளிவிட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் எதிரியின் மீது காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்தது தான். அதிலுள்ள கைரேகை என்னுடையது தான். (**அந்த புகார் மனு அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). தற்போது நான் எதிரியுடன் சமாதானமாகிவிட்டதால் சமூகம் நீதிமன்றத்தில் சமாதான மனு தாக்கல் செய்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் சமாதான மனுவில் உள்ள கைரேகை என்னுடையதுதான். **(அந்த சமாதான மனு அ.த.சா.ஆ.2 ஆக குறியீடு**

**செய்யப்படுகிறது).** எனவே வழக்கை நான் மேல்நடத்த விரும்பவில்லை. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக கருதப்பட்டு அனுமதி கோரப்பட்டு அனுமதி அளித்ததன் பேரில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை.**

2. போலீஸ் விசாரணையில் கடந்த 26.06.2024ம் தேதி வேலை முடித்துவிட்டு வீட்டில் இருந்தபோது எனது வீட்டிற்கு அருகில் வசிக்கும் ஆஜர் எதிரியான படையப்பா (எ) சரவணனும், திருப்பதியும் சண்டை போட்டுக் கொண்டிருந்தார்கள் என்றும், அவர்களிடம் ஏன் சண்டை போடுகிறீர்கள் என்று நான் கேட்டதற்கு ஆஜர் எதிரி என்னை முறைத்துப் பார்த்து அசிங்கமாக பேசி கையில் வைத்திருந்த பாட்டிலால் வலது தோள்பட்டையில் குத்தி ரத்தக் காயப்படுத்தியும், உன்னைக் கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டியதாகவும் சொல்லிவிட்டு தற்போது எதிரியுடன் சமாதானமாகிவிட்டதாலும், எதிரி கேட்டுக் கொண்டதாலும் உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை** : இல்லை

**மறுவிசாரணை : இல்லை**

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

J.Aafreen Begum

Digitally signed by J.Aafreen Begum
Date: 2026.02.19 16:38:13 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், நத்தம்

# DEPOSITION OF WITNESS

(Chapter XXV of BNSS)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

CC.No. 19/2025 LW– 2 PW– 2

| | |
|---|---|
| Name | : திருபழனிராஜன் (கண்ணுற்ற சாட்சி) |
| Father's/Husband's Name | : பால்ச்சாமி |
| Village | : மங்களப்பட்டி |
| Taluk | : நத்தம் |
| District | : திண்டுக்கல் |
| Age | : 34/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 19th day of February 2026

( எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை)**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வந்து கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 என் பெரியப்பா மகன் ஆவார். ஆஜர் எதிரி என் சித்தப்பா மகன் ஆவார். சுமார் 3 மாதங்களுக்கு முன்பாக ஒரு நாள் இரவு சுமார் 9.00 மணியளவில் அ.சா.1ன் வீட்டின் அருகே மதுபோதையில் அ.சா.1ம், ஆஜர் எதிரியும் சண்டை போட்டுக் கொண்டிருந்தார்கள். அதில் அ.சா.1க்கு வலது தோள்பட்டையில் காயம் ஏற்பட்டது. இரவு நேரம் என்பதால் எவ்வாறு காயம் ஏற்பட்டது என்று நான் சரியாக கவனிக்கவில்லை. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக கருதப்பட்டு அனுமதி கோரப்பட்டு அனுமதி அளித்ததன் பேரில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை.**

2. போலீஸ் விசாரணையில் கடந்த 26.06.2024ம் தேதி அ.சா.1 வேலை முடித்துவிட்டு வீட்டில் இருந்தபோது அவரது வீட்டிற்கு அருகில் வசிக்கும்

**ஆஜர் எதிரியான படையப்பா (எ) சரவணனும், திருப்பதியும் சண்டை போட்டுக் கொண்டிருந்தார்கள் என்றும், அவர்களிடம் ஏன் சண்டை போடுகிறீர்கள் என்று அ.சா.1 கேட்டதற்கு ஆஜர் எதிரி அ.சா.1ஐ முறைத்துப் பார்த்து அசிங்கமாக பேசி கையில் வைத்திருந்த பாட்டிலால் வலது தோள்பட்டையில் குத்தி ரத்தக் காயப்படுத்தியும், உன்னைக் கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டியதாகவும், அப்போது அருகில் இருந்த நான் அவர்களை சத்தம் போட்டு விலக்கிவிட்டேன் என்று சொல்லிவிட்டு எதிரி உறவினர் என்பதாலும், எதிரி கேட்டுக் கொண்டதாலும் உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை** : இல்லை

**மறுவிசாரணை : இல்லை**

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

J.Aafreen Begum

Digitally signed by J.Aafreen Begum
Date: 2026.02.19 16:38:20 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், நத்தம்

DEPOSITION OF WITNESS

(Chapter XXV of BNSS)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

CC.No. 19/2025 LW- 3 PW- 3

Name : ரத்தினம் (கேள்வியுற்ற சாட்சி)

Father's/Husband's Name : மாசிபெரியண்ணன்

Village : வேம்பார்பட்டி

Taluk : திண்டுக்கல்

District : திண்டுக்கல்

Age : 41/2026

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 19th day of February 2026

( எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை)**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வந்து பெயிண்டிங் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 என் அண்ணன் ஆவார். ஆஜர் எதிரி என் சித்தப்பா மகன் ஆவார். என் அண்ணன் அ.சா.1ம், ஆஜர் எதிரியும் சமாதானமாகிவிட்டார்கள். வழக்கை பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக கருதப்பட்டு அனுமதி கோரப்பட்டு அனுமதி அளித்ததன் பேரில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை.**

2. போலீஸ் விசாரணையில் கடந்த 26.06.2024ம் தேதி அ.சா.1 வேலை முடித்துவிட்டு வீட்டில் இருந்தபோது அவரது வீட்டிற்கு அருகில் வசிக்கும் ஆஜர் எதிரியான படையப்பா (எ) சரவணனும், திருப்பதியும் சண்டை போட்டுக் கொண்டிருந்தார்கள் என்றும், அவர்களிடம் ஏன் சண்டை போடுகிறீர்கள் என்று அ.சா.1 கேட்டதற்கு ஆஜர் எதிரி அ.சா.1ஐ முறைத்துப் பார்த்து அசிங்கமாக பேசி

கையில் வைத்திருந்த பாட்டிலால் வலது தோள்பட்டையில் குத்தி ரத்தக் காயப்படுத்தியும், உன்னைக் கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டியதாகவும் கேள்விப்பட்டேன் என்று சொல்லிவிட்டு எதிரி உறவினர் என்பதாலும், எதிரி கேட்டுக் கொண்டதாலும் உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை** : இல்லை

**மறுவிசாரணை : இல்லை**

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

J.Aafreen Begum

Digitally signed by J.Aafreen Begum
Date: 2026.02.19 16:38:27 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், நத்தம்

ஆண்டு பட்டிகை வழக்கு எண்.19/2025

DEPOSITION OF WITNESS

(Chapter XXV of BNSS)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

CC.No. 19/2025 Addl.W 1 PW- 4

| | |
|---|---|
| Name | : கணேஷ்பாண்டியன் (தலைமை காவலர்) |
| Father's/Husband's Name | : ராஜாமணி |
| Village | : நத்தம் காவல் நிலையம் |
| Taluk | : நத்தம் |
| District | : திண்டுக்கல் |
| Age | : 39/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 19th day of February 2026

( எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை)**

1. நான் தற்போது நத்தம் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கில் அ.சா.1, ஆஜர் எதிரியுடன் சமாதானமாகி சமாதான மனு தாக்கல் செய்து பிறழ் சாட்சியாகிவிட்டதாலும், இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான சார்பு ஆய்வாளர் திரு.தர்மர் என்பவர் பணி மாறுதலாகி சென்றுவிட்டதாலும், அவருடைய கையொப்பம் எனக்கு நன்கு தெரியும் என்பதாலும் ஆவணங்களைப் பார்த்து சாட்சியம் அளிக்க அனுமதி கோரி அதன் பேரில் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 01.07.2024ம் தேதி 19.00 மணிக்கு சார்பு ஆய்வாளர் திரு.தர்மர் என்பவர் நத்தம் காவல் நிலைய பொறுப்பில் இருந்தபோது மேற்படி நிலைய மனு ரசீது எண்.644/2024உடன் கூடிய புகார் மனுவை பார்வையிட்டு அதன் தன்மைக்கேற்ப நத்தம் காவல்நிலைய குற்ற எண். 378/2024 சட்டபிரிவுகள் 294(பி), 324, மற்றும் 506(1) இ.த.ச.வாக வழக்கு பதிவு செய்து முதல் தகவல் அறிக்கை தயார் செய்துள்ளார். **( முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. )**

2. புகார் மனு மற்றும் முதல் தகவல் அறிக்கையின் அசலை கனம் நத்தம் நீதிமன்றத்திற்கு அனுப்பியும், இதர நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தும், ஒரு நகலை அவர் தன்னுடைய விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, 02.07.2024ம் தேதி காலை 7.00 மணிக்கு சம்பவ இடமான மங்களப்பட்டி இந்திரா நகரில் உள்ள வாதியின் வீட்டின் அருகில் வைத்து சாட்சிகள் மாரியப்பன் மற்றும் பழனி ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு , மாதிரி வரைபடம் வரைந்து பார்வைமகஜர் தயார் செய்துள்ளார். **(மாதிரி வரைபடம் அ.த.சா.ஆ.4 ஆகும். பார்வைமகஜர் அ.த.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

3. பின்னர் சாட்சிகள் சின்னத்தம்பி, திருபழனிராஜன், ரத்தினம், மாரியப்பன் மற்றும் பழனி ஆகியோரை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் இவ்வழக்கின் எதிரியான படையப்பா (எ) சரவணன் என்பவரை 02.07.2024ம் தேதி 10.00 மணிக்கு நிலையத்தில் ஆஜரானவரை காரணம் கூறி கைது செய்து தக்க நிலையப் பிணையில் விடுவித்துள்ளார். பின்னர் இவ்வழக்கில் காயம்பட்ட சின்னதம்பி என்பவருக்கு சிகிச்சை அளித்த நத்தம் அரசு மருத்துவமனை மருத்துவர் திரு.ஜியோனி என்பவரை விசாரணை செய்து சான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். **(விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று அ.த.சா.ஆ.6ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

4. இத்துடன் இவ்வழக்கின் புலன்விசாரணையை முடித்து எதிரி மீது 04.10.2024ம் தேதி 294(பி), 324, மற்றும் 506(1) இ.த.ச.வின் கீழ் குற்றயிறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார். இவ்வழக்கில் அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் சொன்ன வழக்கின் உண்மை சம்பவம் குறித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

5. நான் சொன்னது போல் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் சார்பு ஆய்வாளர் அ.சா.1டம் புகார் மனு எதுவும் பெறவில்லை என்றால் சரியல்ல. அதனடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல. சார்பு ஆய்வாளர் சம்பவ இடம் செல்லாமல் வழக்கு ஆவணங்களை காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்துள்ளார் என்றால் சரியல்ல. எதிரியால் அ.சா.1க்கு காயம் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும், இவ்வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>** : இல்லை

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

J.Aafreen Begum

Digitally signed by J.Aafreen Begum
Date: 2026.02.19 16:38:34 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்